DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

SPL.C.C.No. 01/2025

Deposition of witness for Prosecution/Defence/Court : D.W.1

Accused A1, A2 present

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.தங்கமலை | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 03rd day of March, 2026.

முதல் விசாரணை

நான் தற்போது அருப்புக்கோட்டை நகராட்சியில் மேலாளராக பணியாற்றிவருகிறேன். நான் இன்றைய தினம் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையருக்கு பதிலாக சாட்சியம் சொல்ல வந்துள்ளதற்கான கடிதத்தை பெற்று வந்துள்ளேன். மேற்படி **அனுமதி கடிதம் எ.த.சா.ஆ. 2** ஆகும். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தையும் கொண்டுவந்துள்ளேன்.

எங்களது நகராட்சி அலுவலகத்தில் 2017–2018 ம் ஆண்டில் 18.08.2017 ம் தேதியிட்ட சிசிடிவி பொருத்துவது சம்பந்தமாக போடப்பட்ட **தீர்மான நகல் அசலுடன் உள்ளது அது எ.த.சா.ஆ.3** ஆகும். (அரசு தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

மேற்படி 2017– 2018 ம் ஆண்டிற்கான 30.11.2017 ம் தேதியிட்ட சிசிடிவி ஒப்பந்தக்காரர் விபரம் அடங்கிய பதிவுகள் ஒப்பந்தகாரர் கே. காமாட்சி ராஜன்,

அருப்புக்கோட்டை, MS தென்றல் என்டர்பிரைசஸ், அருப்புக்கோட்டை என்பவருடன் ஒப்பந்தம் செய்ய ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள போடப்பட்ட தீர்மான நகல் **எ.த.சா.ஆ. 4** ஆகும். 04.05.2021ம் தேதி சிசிடிவி பொருத்துவதற்கான தீர்மான நகல் **எ.த.சா.ஆ.5** ஆகும். 04.05.2021ம் தேதி போடப்பட்ட தீர்மானத்தின் பேரில் 18.06.2021ம் தேதி ஒப்பந்தக்காரர்களின் பெயர் எம்.காசிவிஸ்வநாதன், அருப்புக்கோட்டை, கே.காமாட்சி ராஜன், அருப்புக்கோட்டை ஆகியோர்களுக்கு ஒப்பந்தம் கொடுக்கப்பட ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள போடப்பட்ட தீர்மான நகல் **எ.த.சா.ஆ.6** ஆகும்.

2017– 2018ம் ஆண்டில் எங்கள் அலுவலகத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமராக்களின் பதிவுகள் குறித்து நகராட்சி பொறியாளர் முத்து என்பவர் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் எங்கள் அலுவலகத்தில் மனு செய்ததற்கு மேற்படி பதிவுகளின் இவ்வலுவலக பயன்பாட்டில் இருந்து வந்த சிசிடிவி கேமரா 02.04.2018 அன்று இந்நகராட்சியில் விருதுநகர் ஊ.த.க.பிரிவினரால் நகராட்சி பொறியாளர் மற்றும் கணக்கர் ஆகியோர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு எடுக்கப்பட்ட நடவடிக்கையின்போது மேற்படி லஞ்ச ஒழிப்புத்துறையினரால் சிசிடிவி கேமராவில் இருந்த டிவிஆர் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று குறிப்பு செய்யப்பட்ட 18.06.2018 தேதியிட்ட அலுவலக குறிப்பு அசல் **எ.த.சா.ஆ. 7** ஆகும்.

21.11.2023 என தேதியிட்ட விருதுநகர் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து அருப்புக்கோட்டை நகராட்சியின் சிசிடிவி பொருத்தப்பட்டது தொடர்பான விபரங்கள் அடங்கிய ஆவணங்களின் நகல் கேட்டு கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதம் அசல் **எ.த.சா.ஆ.8** ஆகும். மேற்படி 21.11.2023ம் தேதி விருதுநகர். ஊ.த.க.பிரிவில் கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதத்திற்கு அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் ந.க.எண். 5878/2018/சி 1 நாள் 29.11.2023ம் தேதி அன்று கொடுக்கப்பட்ட

பதில் அசல் ஆவணம் அலுவலக நகல் **எ.த.சா.ஆ.9** ஆகும்.

எங்கள் அலுவலகத்திற்கு கருவூல அலுவலகத்திலிருந்து பணப்பட்டுவாடா செய்வதற்கும் கணக்கு பராமரிப்பிற்காக தொகை கொடுக்காமல் நிறுத்தி வைப்பதற்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டு சுற்றறிக்கை கொடுப்பார்கள். அந்த சுற்றறிக்கையின் 11.03.2021 தேதியிட்ட சான்றிட்ட நகல் **எ.த.சா.ஆ. 10** ஆகும். ஒவ்வொரு வருடமும் மார்ச் 31ம் தேதி கணக்குகள் முடிக்கப்பட்டு அன்றைய வருட கணக்குகள் பராமரிக்கப்பட்டு மீண்டும் ஏப்ரல் 5ம் தேதி ஓப்பன் செய்து கணக்கு பட்டுவாடா செய்யப்படும். மேற்கண்ட மார்ச் 31 முதல் ஏப்ரல் 5 வரை மேற்கண்ட சுற்றறிக்கையின்படி எந்த பணப்பட்டுவாடாவும் நடைபெறாது. **(வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள எ.த.சா.ஆ.3 முதல் எ.த.சா.ஆ. 10 வரையிலான அனைத்து ஆவணங்களும் அரசு தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)**

<u>அரசு தரப்பு குறுக்குவிசாரணை –</u>

நான் அருப்புக்கோட்டை நகராட்சியில் எந்த தேதியிலிருந்து பணி செய்கிறேன் என்றால் 01.10.2024ம் தேதியிலிருந்து பணி செய்துவருகிறேன். அதனால் நான் பணியில் சேர்வதற்கு முன்பு உள்ள அலுவலக பதிவுகள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். அரசு தரப்பில் ஆவணங்களை பார்வையிடுவதற்காக குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.